பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 23 வியாழக்கிழமை 05-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 107

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1710)

## பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் இலங்கையில் தொடர்ந்தும் அதிகரிக்கிறது

### சர்வதேச மன்னிப்பு சபை ஜனாதிபதிக்கு கடிதம்

இலங்கையில் பெண்கள் பாலியல்வன்முறைக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் இதுகுறித்து கவனம்எடுக்குமாறும் சர் வதேசமன்னிப்புச்சபைகண்டனம்தெரிவிக்கும் கடிதம்ஒன்றை ஜனாதிபதிசந்திரிக்காவிற்கு அனுப்பிவைத்துள்ளது இக்கண்டனக் கடிதத்தில் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித் தி ருப்பதாவது 1997ம்ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மனித உரிமைச்சட்டத்தின்படி தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்களை பாதுகாப்பது அவசியமாகும். ஆனால்இந்தமுறை இலங்கையில் பின்பற்றப்படுவதாக தெரியவில்லை இதனை மன்னார்சம்பவம் துல்லியமாக உணர்த்தியுள்ளது சோதனையின் பொருட்டு பெண்ணொருவர் படையினரால் கைதுசெய்யப்படும்போது உடல் ரீதியாக சோதனை செய்யவேண்டுமென்றால் (8ம் பக்கம்பார்க்க)

## விருது பெறும் தமிழ்ப் பெண்கள்

(மொனறாகலை)

மொனறாகலையில் நடைபெற்ற சர்வதேச மகளிர்தின விழாவின் போது ஜனாதிபதி சந்திரிகா இரண்டு தமிழ்ப் பெண்கள் உட்பட எட்டுப் பெண்களுக்கு ஜனாதிபதி விருது வழங்கிக் கௌரவித்தார்.

இந்த வைபவத்தில் கிளிநொச்சி முல்லைத்தீவுப்பகுதிகளில்குடும்ப சுகாதாரசேவையில் ஈடுபட்டு சேவை செய்த

→ 8ஆம் பக்கம் பார்க்க

# ● இலங்கையில் தொடரும் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறலை தடுக்குமாறு

# ஐ. நா. செயலருக்கு அவசர மகஜர்

## பத்துத் தமிழ்க் கட்சிகள் அனுப்பிவைப்பு

(நமது நிருபர்)

இலங்கையில் அரசபடைகளினால் காலத்திற்குக்காலம் தமிழ்மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக தலையிட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐ. நா. செயலாளர் நாயகம் கோபிஅனானுக்கு தமிழ்க் கட்சித் தலைவர்கள் ஒப்பமிட்டு மகஜர் ஒன்றினை நேற்று அவசரமாக அனுப்பி வைத்துள்ளனர்.

ஐ.நா.செயலாளர் நாயகம் கோபிஅனானுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கடந்தகாலங்களில் அரச படைகளினால் மேற்கொள்ளப்பட்டு வந்த மனித உரிமை மீறல்களையும்,மன்னார் சம்பவம், புங்குடுதீவு சாரதாம்பாள் படுகொலைச் சம்பவம்,மிருசுவில் படுகொலைச் சம்பவம் மற்றும் சம்பவங்களை முன்னிலைப் படுத்தி அச்சம்பவங்களைப் போல் வருங்காலத்தில் நடைபெற இடமளிக்கக் கூடாதென கோபிஅனானுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தமிழ்க்கட்சித் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இக் கடிதத்தில் இதுவரை காலமும் இலங்கை பூராகவும், தமிழ்மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைச் சம்பவங்கள், கொலைச்சம்பவங்கள் தொடர்பான சகல

→ 8ஆம் பக்கம் பார்க்க

## யாழ். மாநகரசபை முன்றலில் 3வது நாளாக நேற்றும் உண்ணாவிரதப் போர்

[யாழ்ப்பாணம்]

யாழ்,மாநகர சபையினால் வேலை நீக்கம் செய்யப்பட்ட 36 குடும்பநல சேவையாளர்களின் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மூன்றாவதுநாளாக யாழ்'மாநகர சபை முன்றலில் இடம் பெற்றது.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் மழையில் நின்றவாறு ஒடும்வெள்ளத்தையும் பொருட்படுத்தாது ஆலமரத்தின் கீழ் இருந்து இவர்கள் உண்ணாவிரதமனுஷ்டித்தனர்.

உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் குடும்பநல சேவை

→ 8ஆம் பக்கம் பார்க்க

## யாழ்-மாநகர சபை விவகாரம் பாராளுமன்றில் நேற்று பிரஸ்தாபிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாண மாநகர சபையின் முன்பாக இடம்பெற்றுவரும் சுழற்சி முறை உண்ணவிரதப்பேராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டம் குறித்து பாரளுமன்றத்தில் நேற்று பிரஸ்தாபிக்கப்பட்டது.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில்கலந்து கொண்டு உரையாற்றிய ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.தவராசா மேற்கண்டவாறு பிரஸ்தாபித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மேயர் என்.ரவிராஜ் அவசியம் கொழும்பு செல்ல வேண்டி இருப்பதால் இன்று காலை கொழும்பு பயணமாகிறார். (ம)

## அரசு-புலிகள் பேச்சு இக்கட்டான நிலையில்

(இலண்டன்)

இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன்மேற்கொள்ளவுள்ள பேச்சுவார்த்தையின் போது இரண்டும் கெட்டான் நிலையில் சிக்கித் தவிப்பதாக மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

லியம்பொக்சின் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று பிரிட்டன் அழுத்தம் கொடுத்தவரும் அதேவேளையில் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் பேச்சு நடத்தப்பட வேண்டுமென்று இந்தியத்தரப்பில் அழுத்தபிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் மேற்கு நாட்டு இராஜதந்திரிகள்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ★ நிமலராஜன் படுகொலை பூரணமான அறிக்கையை 23ஆம்திகதிசமர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை தொடர்பாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிசார் நேற்று பூரண விபரங்கள் அடங்கிய அறிக்கையை யாழ்: நீதி மன்றில் சமர்ப்பிக்கானமயால் இம் மாதம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை ஆக்க பூர்வமான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று யாழ். நீதிவான் இ.த. விக்கினராஜா யாழ், குற்றத்தடுப்புப்பொலிசாருக்குஉத்தரவிட்டுள்ளார்.

நிமலராஜன் படுகொலை தொடர்பான அறிக்கையினை யாழ்.குற்றத் தடுப்புப் பொலிசார் நேற்றைய தினம்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் பாலியல் வல்லுறவுச் சம்பவம் விசாரணையின்பின் குற்றவாளிகள் அவசியம் தண்டிக்கப்படுவர்

### ஈ. பி. டி. பி. எம். பிக்களிடம் ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

மன்னாரில் இடம் பெற்ற இளம் பெண்கள் மீதான பாலியல் வன்முறைச்சம்பவங்கள் மீதான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

விசாரணைகளின் பின் குற்றவாளிகளாகக் காணப்படுவோர் தண்டிக்கப்படுவார்கள்.

இவ் விசாரணை திருப்தி அளிக்காத பட்சத்தில் கிருசாந்தி குமாரசாமியின் சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டது போன்று விசாரணை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் எம்.பிக்களுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி சந்திரிகா ஈ பி டி பி எம் பிக்களிடம்உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினமிரவு 9 மணி முதல் நேற்று அதிகாலை 2 மணி வரை இச் சந்திப்பு இடம் பெற்றது.

ஈ.பி.டி.பி. பாராளுமன்ற

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தேர் உற்சவம்

### வண்ணை வைத்தீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ் பெற்ற வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத விஸ்வலிங்க வைத்தீஸ்வரன் ஆலய தேர் உற்சவம் இன்று காலை 9 00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நாளைக் காலை10.00மணியளவில் தீர்த்தோற்சவம் இடம்பெறும். (க)

★ ★

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் அருள்மிகு ஹரிஹர புத்திர (ஐயனார்)ஆலய இரதோற்சவம் இன்று காலை 8. 00 மணியளவில் இடம் பெற உள்ளது.

தீர்த்தோற்சவம் நாளை வெள்ளிக்கிழமைஇடம்பெற உள்ளது. (க-இ)

★ ★

[அரியாலை]

சங்கரத்தை ஸ்ரீ பத்திர காளி சமேத வீரபத்திரர் ஆலய தேர், தீர்த்தஉற்சவங்கள் நாளையும் நாளை மறு தினமும் இடம் பெறவுள்ளன. [உ-106]

## பங்குனி உத்தரம்

(இணுவில்)

இணுவில் பரராஜ சேகரப் பிள்ளையார் கோயில் பங்குனி உத்தர திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இடம் பெறவுள்ளது. [உ-49]

## பனம்பொருள் கண்காட்சி

[ஈச்சமோட்டை]

வட்டு .தெற்கு மாதர்சங்கத்தினரின்பத்தாவது ஆண்டு நிறைவு விழாவும்,பனம் பொருள்கண்காட்சியும் எதிர் வரும் செவ்வாய், புதன் கிழமைகளில் இடம் பெறவுள்ளன.

இவ்விழாவில்,வலிமேற்கு பிரதேச சபைத்தலைவர் ந.திரிலோக நாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். [உ-59]

## கொழும்பில் கூட்டம்

(கொழும்பு)

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வெளி விவகாரச் செயலாளர்கள் அடுத்தமாத நடுப்பகுதியில் கொழும்பில் கூடவுள்ளனர் (உ-4)


# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

## சின்னத்தம்பி கோபாலன்

(இராசையா)

அன்புத்தந்தையே! எங்கள்குடும்பத்தின் ஒளிவிளக்கே ஆனதுமாதமொன்று நீங்கவில்லை எம்துயர் பாசத்தின் உறைவிடமே எமை வழிநடத்திய அன்புச்தெய்வமே! பாசமுடன் எம்மைப் பெற்றெடுத்து வாழநல் வழிகாட்டிய அன்புத்தந்தையே! ஈரமில்லா இதயம் கொண்டகாலனவன் உமையழைத்தான் எமைஇங்கு தனியாக்கி அரனடியில் அமைதிபெற வேண்டுகிறோம் எந்நாளும்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

கடந்த 6 03 2001ல் இறைபதம் அடைந்த எங்கள் அன்புத்தெய்வத்தின்இறுதிச்சடங்கில் கலந்து தொலைபேசிமூலம் அனுதாபச்செய்தி அனுப்பியும் மலர் வளையம்வைத்து அஞ்சலிசெலுத்திய அதிபர்கள் ஆசிரியர்கள் அனைவருக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் பலபுரிந்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (5.04.2001ல்) வியாழக்கிழமை நடைபெறும் ஆத்மாசாந்திப் பிராத்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்கள் மற்றும்அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

10,இராசாவின் தோட்டவீதி
யாழ்ப்பாணம்
05.04.2001

பிரிவால்துயருறும்
மனைவி பிள்ளைகள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

(கி-1747)



# புதிய தையல் நிலையத் திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விக்கிர ஆண்டு பங்குனி மீ 23 ம் நாள் (05 - 04 - 2001)
வியாழக்கிழமை காலை 7 - 15 மணி முதல் 8 - 30 மணி வரை
வரும் சுபமுகூர்த்த வேளையில்

## ஹப்பி ரெயிலர்ஸ் மாட்

என்னும் பெயருடன் ஆரம்பித்து நடாத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் சமுகந்தந்து திறப்புவிழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

S. A. C. முகமட்றசீன் அன்
சி. பற்குணம்

87/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(கி/1749)



# - - இன்று முதல் நான்கு நாட்களுக்கு - -

250க்கு மேற்பட்ட கலைஞர்களின் பங்கேற்பில்
பிரமாண்டமான மேடை அமைப்பில்

மனிதம் எமது பாடல்

## திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்

மனிதம் எமது தேடல்

# காவிய நாயகன்

(திருப்பாடுகளின் காட்சி)
ஏப்ரல் 05,06,07,08 - 2001

## மன்ற அரங்கில் தினமும் மாலை 7 மணி

(வியாழன் முதல் ஞாயிறு வரை)

★ இன்று மட்டும் பிரவேசம் இலவசம்

நாளை முதல் அனுமதி 10.00 ஆசனம் 20.00

முக்கியகுறிப்பு - இந்நாடாக மேடையேற்றத்திற்காக இன்று முதல்ஞாயிறு வரை ஊரடங்கு நேரம் இரவு 11 மணி வரை தளர்த்தப் பட்டுள்ளது; எனவே 6; 15 மணிக்கு ஆரம்பமாக இருந்த நிகழ்வு 7.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்.

மனிதத்துவத்தின் தேடலுக்கான கல்வாரிப்பயணத்தில் இணைந்திட

## அனைவரையும்அன்புடன் அழைக்கிறோம்

238 பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

- திருமறைக் கலாமன்றம்
தொலைபேசி : 2393

### விளம்பர அன்பளிப்பு

கு.சிறிகாந்தன்
தவமகால்
உரும்பிராய் மேற்கு
உரும்பிராய்

ஆசிர்வாதம்ஸ்ரோர்ஸ்
61 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

சதாபொன்ஸ்
அல்வாய்
T.P 070 . 212360

(கி 1746)



மலிவு மலிவு மலிவு

# ராசி சில்க்ஸ்சின் அதிரடி மலிவு விற்பனை

## புத்தாண்டை முன்னிட்டு

புத்தம் புதிய சாறி வகைகள், நங்கையர் விரும்பும் பஞ்சாபி(லெல்லெற்), சோழி செற், ஸ்கேட், பிளவுஸ்,
ஸ்கேட் அன் பிளவுஸ், பேபி பாட்டி புறக்ஸ், பேபி சூட்
ஆடவர்களுக்கேற்ப ரவுசர் துணி, புத்தம் புதிய சேட், Tசேட் வகைகள், பற்பல வர்ண ஆடை திணிசுகள்
மங்கள நிகழ்வுக்கேற்ப சுபமுகூர்த்தப் பட்டுப்புடவைகள், நித்தம் நித்தம் வரும் கொட்டன் சாறிகள்
என்னும் பல எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள யாழ் நகரில்,

# ராசி சில்க்ஸ்

70,71A,நவீன சந்தை(உட்புறம்), யாழ்ப்பாணம்.

மலிவு மலிவு மலிவு

[கி/1748]

# வாழ்வில் இணைய ஏங்கும் இளநெஞ்சங்களை வாழ விடாமல் தடுக்கின்ற சீதனக் கொடுமை

**கடந்த 28. 3.2001 புதன்கிழமை பி.பி.சி தமிழ்ச் சேவையில் (தமிழ்முழோசையில்) ஓர் ஒலிச் சித்திரம் ஒன்று ஒலிபரப்பாகியது. அது அண்மையில் யாழ். வந்து திரும்பியபி.பி.சி யின் கொழும்புச் செய்தியாளர் தயாரித்த நிகழ்ச்சி.இது தொடர்பாக நாம் தரும்தகவல் இவை.**

எமது தமிழ்ப் பாரம்பரியத்தின் படி திருமணம் என்பது இருமனங்கள் ஒத்து இல்லற பந்தத்தில் இணையும் சடங்காகும். ஆனால் இன்று இந்நிலை மாறிவிட்டது. மனம் இருந்த இடத்தைபணம்பிடித்துக் கொண்டது. இதனால் ஆயிரங் காலத்துப்பயிரான திருமணப்பயிர்எத்தனையோ பெண்களின் மனத்தோட்டத்தில் விளைய மறுக்கிறது. இதற்கு சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படும் திருமணம், ரொக்கத்தில் நிச்சயிக்கப் படுவதே பிரதான காரணம் எனலாம். இத்தகைய ஓர் அவல நிலைக்கு பலகாரணங்கள் உள்ளன.

## மணமகன் தட்டுப்பாடு

ஆம்! எமது நாட்டைப் பொறுத்த வரையில் இன்னும் குறிப்பாககூறுவதாயின்தமிழ் சமூகத்தில் ஏற்கனவே ஆண்களைவிட பெண்களே அதிகம், இந்நிலையில் இருக்கும் பெண்களுக்கே ஆண்கள் போதாத நிலையில் இங்கு உள்ள ஆண்களும் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவென ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர்- செல்கின்றனர். இப்படிச் சென்றவர்களில் கூட குறிப்பிடத்தக்கவினர் பிறநாட்டுப் பெண்களையே கைப்பிடிக்கின்றனர். அத்துடன்ஆண்களைப்போல நாட்டு நிலை கருதி புலம் பெயர்ந்து வெளிநாட்டில் வசிக்கும் எம்நாட்டுப் பெண்களையும்( தமிழ்சிங்களமணம் மூடிக்கின்றனர். இந்தியபெண்களையும் திருமணம் செய்துள்ளனர். இதன் காரணமாக இங்குள்ள தமிழ்ப் பெண்களின் நிலை கவலைக்குரியதாகவே உளது, ஏனெனில் இங்குள்ள ஆண்களில் பெருமளவில் யுத்தநடவடிக்கைகளிலும் அதன் காரணமாக தோன்றிய பல சட்டங்களாலும் கொல்லப்பட்டும், ஊனமடைந்தும் இன்னும் சிறைகளில் வாடிய படியும் இருக்கும் இடம்? தெரியாமலும் என பல வழிகளிலும் முடங்கிப் போயுள்ளனர்.

ஆக மொத்தத்தில்மாப்பிள்ளைச் சரக்கிற்கு பெரும் தட்டுப்பாடு, இவ்வகையில் மேற்கூறிய 'முடக்க'ங்களிலிருந்து விதிவிலக்குப் பெற்றவர்கள் அதாவது எஞ்சியுள்ள மாப்பிள்ளைகளுக்கு கிராக்கி- மவுசு ஏற்படுவது தவிர்க்க முடியததே. இதனால் இந்த மாப்பிள்ளைகளின்- அவர்களின்பாடு படு கொண்டாட்டம் தான். ஏன் தெரியுமா? கொளுத்தசீதனம்கேட்டதை கொடு இல்லையேல் விடு' என வீம்பு பிடிக்கின்றனர்.

## சீதனக் கொடுமை

இப்படியாக இங்கிருக்கும் பெண்களுக்கு இங்கிருக்கும் ஆண்களையே மணம் முடிக்க வேண்டிய நிலையில் பெண் தரப்பினர், ஆண் தரப்பினர் கேட்பதை கொடுக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப் படுகின்றனர். இதிலும் வேதனை என்னவென்றால்

---

## தங்கியண்ணா

மீசாலையூர்

---

ஒரு பெண், இரு பெண்கள் என்றால்போகிறது3 ,4பெண் பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின்நிலை பரிதாபம் தான். இருப்பதையெல்லாம் விற்று மூத்தவர்களுக்கு 'தாரை' வார்த்து விட்டு இளையவர்களுக்கு ஒன்றுமில்லாத நிலையில் பல குடும்பங்கள் உள்ளன.

## தோற்றுவித்தோர்

இந்தவேளையில்இச்சீதனக் கொடுமையை தோற்றுவித்த 'பெருமைக்கு?' உரியவர்களையும் சற்றுப் பார்ப்பதுஅவசியமாகிறது.1980-85 காலப் பகுதியை அடுத்து சூடுபிடிக்கத் தொடங்கிய இவ்அவலம் 90-95 களில் சற்று அடங்கியிருந்தது. பின் 1995–2000 முதல் இன்று வரை உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. இப்படியே போனால் லட்சக் கணக்கு கோடிக்கணக்கானாலும் ஆச்சரியப்படமுடியாது; இந்நிலைக்கு பணம் படைத்த பெண் வீட்டாரே முதற்காரணம். தமது பிள்ளைகளுக்கு தாம் 'அள்ளிக்' கொடுப்பதை 'சீதனம்' என்று ஊரறிய கொடுத்தன் விளைவே இன்றைய அவலத்திற்குகாரணம். தமது பணச் செருக்கை ஊருக்கு பெருமையுடன் காட்டதமதுபெண் பிள்ளைகளை 'இன்ஜினியர், டொக்ரர்' என உயர்பதவிகளைச் சேர்ந்த மணமகன்களுக்கு ஆசிரிய, வங்கி வேலை புரிவோருக்கும் மணமுடித்த இவர்கள் இப்படி அள்ளிக் கொடுக்க அதையே சாதாரண மக்களும் [ஆண்களை வைத்திருப்பவர்கள] பின்பற்றி வர ஆரம்பித்தனர். இதன் காரணமாகமணமகன்களின் பெறுமதி ஆனைவிலை குதிரை விலை,யைத் தாண்ட பெண்களை வைத்திருக்கும் குடும்பத்திற்கு பெரும் சிக்கல்கள் ஏற்பட்டன.இதிலும்இன்னொரு வேடிக்கை முன்பு சீதனமாக சிறிது தொகைப் பணமும் வீடுவளவு, நகை மற்றும் பொருள் பண்டங்கள் என்பன வழங்கப்பட்டு வந்தன. ஆனால் இன்றைய இடப் பெயர்வு மற்றும் யுத்தச் சூழ் நிலையை உணர்ந்த மாப்பிளை வீட்டார், வீடுவளவையும், பொருள் பண்டங்களையும் விட்டு பணமும், நகைகளையும் தான் விரும்புகின்றனர் இத்த இடத்தில் பாரதியின் 'காணி நிலம் வேணும் பராசக்தி' என்ற பாடலை, காசு, பணம்நகை வேணும் பராசக்தி' என்று மாறறிப் பார்க்க மனம் எண்ணுகிறது

## தரகர்களின் தொல்லை

இதுஒருபுறம்இருக்க,கலியாணத்தரகர்களின் தொல்லை மறுபுறத்தே அதிகம்எத்தனையோ தடைகளைத்தாண்டி, ஏதோ உள்ளவற்றை விற்றுப் புரட்டிய பணத்தைக் கொண்டு தம்பிள்ளைகளுக்கு மணமுடிக்கும் பெற்றோர் தரகர்களுக்கும் போதாக் குறைக்கு கொட்டியளக்கின்றனர். ஒரு திருமணம் ஈடேறத்தரகரின் பங்கும் குறிப்பிடத்தக்களவு தாக்கம் செலுத்துகிறது. இதற்குச் சுமார் ஐந்து வீதம் தரகுப் பணமாக அறவிடப் படுகிறதாம். உதாரணமாகப் பத்து லட்சம் சீதனமாயின் அதில் சுமார் ஐம்பதினாயிரம் தரகருக்குத் தண்டப்பணம். பி. பி. சி. யின் தகவல்படி ஆசிரியர் (பட்டதாரி) ஒருவர்க்கு 5 முதல் பத்து இலட்சமும், வைத்தியர் ஒருவருக்கு 10 முதல் 40 இலட்சமும் சீதனச் சந்தையில் குறிக்கப்பட்டுள்ளது.

## தோஷக்குறைபாடு

இபடி ஒவ்வொன்றாகத் தாண்டித் தாண்டி ஒருவாறு பணம்புரட்டி, நகைசெய்து திருமணத்திற்கு தயாரான நிலையில் சில பெண்களுக்கு தோஷக்குறைபாடு அடுத்த தடையாக வந்து சேர்கிறது இதனால் எத்தனையோபேர் கன்னியாகவே வாழவேண்டி ஏற்பட்டுள்ளது ஆகமொத்தத்தில் எம் தமிழ்ப் பெண்களின் இந்த அவலநிலை பலவழிகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந் நிலைமாறி இல லறம் எனும் நல்லறம் எல்லோருக்கும வாய்க்க இறைவன்தான் அருளவேண்டும்!

---

வண்ணை வைத்தீஸ் வர ஆலய

இரத உற்சவத்தை ஒட்டிய

## பாமலர்கள்

### விம்மல் அறியாயோ?

கன்ன லின்த மிழ்எ டுத்துப் பண்ணு டன்அ
தைத்தொ டுத்து
உள்ளம் நெக்கி நின்று அன்பர்-சிந்துபாட
அஞ்சு நஞ்ச துண்ட கண்டன் பங்க மர்ந்த
செங்கை மங்கை
செங்க ழற்சி லம்ப லம்பி-நின்று ஆர்ப்ப
வன்ன வன்னத் துண்டு கள்இ ணைந்தி ழைந்து
கொண்டு நெஞ்சு
கொஞ்செ ழில்கள் மிஞ்சு பஞ்ச-ரதமேறும்
வஞ்ச மில்உ ளத்தொ டுன்னை அண்டி
னர்க்க ருள்சு ரந்து
சந்த தம்வ ழங்கு கின்ற-வைத்தீசா
மன்னு துன்ப மெங்க ணும்நி றைந்தி டர்கள்
செய்ய எங்கள்
நெஞ்ச ழிந்து நின்று விம்மல்-அறியாயோ?
தஞ்ச மென்றி அண்டர் கெஞ்ச நஞ்சை யுண்டு
முப்பு ரம்எ
ரித்த கண்டன் என்றுசொல்லல்-பொய்தானோ?
நின்ன ருட்ப தம்த னுக்குத் தொண்டு செய்யு
தொண்ட ரின்பம்
கொள்ளச் சிந்தை கொள்ளினிங்கு-கூடிடாதோ?
கெஞ்சு மன்ப ருக்கு நின்க டைக்க ண்ண்ன
ருள்கி டைக்க
நின்ற ருள்சு ரக்கு வண்ணைப்-பெருமானே.

- நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்

★ ★ ★

### பாமாலை பொலிந்திட

வண்ணத் திருமேனி வைத்தியர் தேரேறுகிறார்
கண்ணைக் குளிர்விக்கும் கைலையர்தேரேறுகிறார்
எண்ணக் கணக்கிலா பக்தர்கள்சூழ தேரேறுகிறார்
வண்ணத் தமிழ் மணக்கும் பாமாலை பொலிந்திடவே

வேலணை பாலா

★ ★ ★

### தேரேறித் திருவுலா

வாழைகள் அணிவகுத்து நின்றிட
மாவிலை தோரணங்கள் நர்த்தனமாட
பூரண கும்பங்கள் வரவேற்பிசைக்க
பக்தர்கள் புடை சூழ வர
வண்ணார் பண்ணை வீதிகளில்
தையல் நாயகி அம்மையோடு
தேரேறி திருவுலா வருகின்ற
ஆலமுண்ட கறைக் கண்டனே!
சீலத்தோடு வாழ வையென்றே
நின் வாசலில் வந்து நிற்கிறோம்
நீற்றானே நமக்கு அருள் வேண்டும்.

மீசாலையூர் கமலா

---

# இராசி பலன்

5.4.2001
(பங்குனி 23, வியாழன்)
துவாதசி பி ப 3.27 வரை
மகம் மு ப 11 10 வரை
இராகுகாலம் 1 39- 3 09
சுபநேரம் 6 09- 7 39
அமிர்த சித்தம், பி, தோச விரதம்.

**மேடம்**
காரிய தடங்கல், கௌரவக்குறைவு, அதிகாரிகள் வெறுப்பு, வியாபார மேன்மை.

**இடபம்**
காரிய நன்மை, பயந்த சுபாவம், தன்னம்பிக்கைக் குறைவு, தாய்வழி உறவு.

**மிதுனம்**
பிரயாணம், அந்நியர் சந்திப்பு, தனவரவு, இனிய சம்பவம்.

**கடகம்**
மாதர் நட்பு, பொருள்விரயம், முயற்சி தாமதம், நிலை மாற்றம்

**சிங்கம்**
ஆழ்ந்த சிந்தை, அதிகாரிகள வெறுப்பு, காரியம கைகூடும், நண்பர்கள் உதவி.

**கன்னி**
உணர்ச்சி வசப்படல், பணச் செலவு, சயனசுகக் குறைவு, பிரயாண அலைச்சல்.

**துலாம்**
மனமகிழ்ச்சி, பொருள் வரவு, காரியம் கைகூடும், தொழில் நன்மை.

**விருச்சிகம்**
நலல செய்தி, பணிப்பாளர் உதவி, முயறசி கைகூடும், தொழில் சிறபபு.

**தனுசு**
புதிய திட்டமிடல், பிரயாணம், உடல் சோர்வு, காரிய தாமதம்.

**மகரம**
பிரயாண பயம், நண்பர் விரோதம, வியாதி திடீர் நன்மை.

**கும்பம்**
பிரயாணம், சுவாரஸ்யம், போசன சுகம், காரிய நன்மை.

**மீனம்**
எதிரிகளால் நன்மை, நோய் குணமடைதல், முயற்சி கை கூடும், தொழில் விருததி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

---

விடுமுறைதினம்

## அதிகரிப்பு

(மகாமுயபு)

தமிழ், சிங்களப் புத்தாண்டை ஒட்டி பாடசாலை விடுமுறை நாட்கள அடுத்த ஆண்டில இருந்து அதிகரிக்கப் படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜெயதந்தெரிவிததுளளார். (உ-4)

---

# இலங்கைத் தமிழர்கள் எனக்கூறி பிரிட்டனுக்குள் நுழையும் இந்தியர்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்கள் எனக் கூறிக்கொண்டு பிரித்தானியாவிற்குள் இந்தியத் தமிழர்கள் தஞ்சம் புகுந்து வருகிறார்கள்என தெரியவந்துள்ளது.

சட்ட விரோதமாக ஆட்களை வெளிநாடுகளுக்கு கொண்டுசெல்லும் இலங்கைத் தமிழர்களின் உதவியுடனேயே இந்தியத் தமிழர்கள் இவ்வாறு பிரிட்டனுக்குச் செல்கிறார்கள்.

இவ் இந்தியத் தமிழர்கள் பிரிட்டனுக்குள் சென்றதும் தாம் இலங்கையில் சித்திரவதைக்குள்ளாகுவதாகவும்; தமது உயிருக்கு அங்கு உத்தரவாதம் இல்லை என்று கூறி வருவதாகவும் தமிழ்நாடு, பாண்டிச்சேரி ஆகிய இடங்களைச்சேர்ந்த தமிழர்களே இத்தகைய பொய்யைக் கூறிக் கொண்டு பிரிட்டனுக்குச் செல்கிறார்கள் எனவும் அறிய முடிகிறது.

இவர்களை பிரிட்டனுக்குள் அழைத்துச் செல்லும் முகவர்கள் இலங்கைத் தமிழர்களின் பழக்கவழக்கங்கள், பேச்சு ஆகியவற்றை நன்கு பயிற்றுவித்த பின்னரே அழைத்துச் செல்கின்றனர்.

இவ் இந்தியர்கள் தாம் இலங்கையில் மிகக் கொடூரமாக நடத்தப்படுவதாக நிரூபிப்பதற்கான ஆவணங்களைப் பெறுவதற்கு இந்தியப் பணத்தில் ஐந் லட்சம ரூபாவைச் செலுததுவது ன்,

இவர்கள பிரிட்டனுக்குள் சென்றவுடன், சித்திரவதை செய்யப்பட்டதை நிரூபிக்கும போலி மருத்துவச் சான்றிதழ்கள் இலங்கை அரசாங்த்தினால் அல்லது தமிழ் ஆயுதக் குழுக்களால் உறுதிப்படுத்தப்பட்டதாக முகவர்களால் கொடுக்கப்படுகின்றது.

இவ்வாறு செல்லும ஒருவரிடம் 18 ஆயிரம் தொடக்கம் 32 ஆயிரம டொலர்வரை பணம் அறவிடப் படுகிறது இத் தகவலை இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது. (செ)

# செய்தித் துளிகள்

## மதுஒழிப்பு மும்முரம்

(துன்னாலை)

வடமராட்சிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வந்த பலர் இனம் காணப்பட்டு ஏற்ற தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாகவும்,

இப்பணி முழு அளவில் முடுக்கி விடப்பட்டிருப்பதாகவும் பருத்தித்துறை மதுவரித் திணைக்களப்பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். [உ-41]

## திருத்தாண்டக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

பங்குனி உத்தரத்தை முன்னிட்டு, நாளை நல்லூர் தேரடி அறுபத்து மூன்று நாயனார் குருபூசை மடத்தில் அகில இலங்கை திருமுறை மன்றத்தினரால் காலை6.00 மணி தொடக்கம் திருத்தாண்டக முற்றோதல் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் மதியம் மகேசுர பூசையும் இடம்பெறுமென அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (உ)

## சலரோக விழிப்பு மாதம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவித் திச் சபையால் இம்மாதம் சலரோக விழிப்பு மாதமாக பிரகடனம்செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8.00-மணி 9.00 மணி வரை 25 பேர் விதம்,இலவச சலரோக இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. (உ)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அத்தியடி அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (செ)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலய நவகுண்டபக்ஷ புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் இன்று காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ)

## கொழும்பில் தேடுதல்

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித் தெருகோவில் பகுதியில்நேற்று முன்தினம் காலை திடீர்தேடுதல் நடவடிக்கை ஒன்று இடம் பெற்றது இத்தேடுதல் நடவடிக்கை நேற்று முன்தினம் காலை9 மணி முதல் 11.30 மணிவரை நீடித்தது.

கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும இராணுவத்தினரும் விசேடவழிபாடடில்கலந்துகொள்வதை யொட்டியே இத்தேடுதல் வேட்டைநடாத்தப்பட்டது. இதன் போது 50க்கு மேற்பட்டோர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். [வ]

## உதை பந்தாட்டம்

(சுண்டுக்குளி)

உரும்பிராய் சென்மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய உதை பந்தாட்டப்போட்டியின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இறுதிப்போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கொக்குவில் பொற்பதி அணி ஆடவுள்ளது. (உ-110)

## நிர்வாகசபை தெரிவு

(மந்திகை)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் தலைவர் நா. இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது.

தலைவராகஇ.ஜெயபாலன் செயலாளராக ந. சிவபாலன் பொருளாளராக க.குணபாலசிங்கம் உபதலைவராககா.நவரட்ணம், உப செயலாளராக வி. கே. தவராசா ஆகியோரும் செயற் குழு உறுப்பினர் 18 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-23)

## இளைஞர் இருவர் விடுதலை

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி களுத்துறை சிறைச்சாலையில் இருந்து யாழ் நீதிமன்றில் அஜர்படுத்தப்பட்ட வல்வெட்டித்துறையை சேர்ந்த சின்னையா அற்புதராஜா, அதேஇடத்தை சேர்ந்த ராஜரட்ணம் பஞ்சலிங்கம்ஆகிய இரு இளைஞர்களும்சட்டமா அதிபரின் பணிப்பின் பேரில் நேற்றுமுன் தினம் யாழ். நீதவான்இ. விக்கினராஜாவால் விடுதலை செய்யப்பட்டனர். [உ-6]

## தலைவர் தெரிவு

(ஈச்சமோட்டை)

சிக்கன கடன் வழங்கும் சமாசங்களின் பிராந்திய சபைகளுக்கான பொதுக் கூட்டம் அண்மையில் வட்டு. இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. (உ-59)

## புனரமைப்பு தொடர்கிறது

[துன்னாலை]

யுத்த அனர்த்தங்களினால் இடைநிறுத்தப்பட்டிருந்த வரணி வடக்கு கும்பிட்டாள் புல பிள்ளையார் ஆலய புனரமைப்பு பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன, (உ-4)

## திருட்டு அம்பலம்

(யாழ்ப்பாணம்)

தம்பியின் கைச்சங்கிலியைத் திருடி விற்ற தமையன் தம்பியிடமே வசமாக மாட்டிக் கொண்ட சம்பவம் நல்லூர் கோயில் வீதிப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. (உ-104)

## பொங்கல் விழா

(ஏழாலை)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் விழா வரும் 10ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (உ-12)

ரணிலின் நோர்வே பயணத்திற்கும்

# பேச்சு வார்த்தைக்கான திகதி நிர்ணயிப்புக்கும் தொடர்புண்டு

## நோக்கர்கள் ஊகம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நோர்வே அரசின் அழைப்பை ஏற்று வரும் 11 ஆம் திகதி அங்கு விஜயம் செய்யவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

நோர்வே, முன்னெடுத்துள்ள சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து ரணில் அங்கு உயர்மட்டத் தலைவர்களுடன் கலந்து உரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை எங்கே, எப்போது நடத்துவது என்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படாத பட்சத்தில், இந்த மாத முடிவுக்குள் அது குறித்த தீர்மான அறிவித்தல் வெளியாகும் என நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் சபையில் அறிவித்ததற்கும்,

ரணிலின்நோர்வே பயணத்திற்கும் இடையே தொடர்புகள் ஏதாவது இருக்கலாம் என நோக்கர்கள் ஐயுறவு வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கை இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் நடுநிலை ஏற்பாட்டாளராகச் செயற்பட்டு வரும் நோர்வே பிரதிநிதி எரிக்ஷோல் ஹெய்ம் இங்கு வரும் வேளைகளில் எதிர்க்கட்சித் தலைவருடன் ஆலோசனைகள் நடத்திச்சென்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-4]

தம் முயற்சிக்கு இடையூறாய் இருந்த

## விழிப்புக் குழுவினரை தாக்க முயன்ற திருடர்

(துன்னாலை)

விழிப்புக்குழுவைத் தாக்க முயன்ற திருடர்களின் முயற்சி முறியடிக்கப்பட்ட சம்பவம் அண்மையில் கரவெட்டிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

திருடர்களின் தொல்லையைத் தவிர்க்கும் வகையில் அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வரும் மேற்படி பகுதி விழிப்புக்குழுவினர் தமது காவற்கடமையில் ஈடுபட்டிருந்த வேளை,

அங்கு வந்த திருடர்கள் தமக்கு இடையூறாய் இருந்த விழிப்புக்குழுவினரைத் தாக்க முற்பட்டதாகவும்,

உறுப்பினர்கள் உசாரடைந்து அவர்களை தாக்கியதில் தப்பினோமா பிழைத்தோமா என ஓட்டம் பிடித்ததாகவும் தெரியவந்துள்ளது. [உ-41]

# வாகனத்தைச்செலுத்துவதில் போட்டி பேருந்து சாரதி தாக்கப்பட்டார்

(ஏழாலை)

மினிபஸ்சாரதியும் நடத்துனரும் இணைந்து பேருந்துச் சாரதியைத் தாக்கிக் காயப்படுத்திய சம்பவம் அண்மையில் தெல்லிப்பழைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப்பழை நோக்கிசென்று கொண்டிருந்தபோது மினிபஸ் மற்றும் பேருந்து சாரதிகளிற்கிடையே வாகனத்தைச் செலுத்துவதில் கருத்து முரண்பாடு ஏற்பட்டதாகவும், இதனையடுத்து மினிபஸ்ஸின் சாரதியும் நடத்துனரும் இணைந்து பேருந்து சாரதியை தாக்கியதாகவும் தெரியவந்துள்ளது.

தாக்கப்பட்ட பேருந்து சாரதி இ. தர்மகுலசிங்கம் (வயது 46) தற்போது சிகிச்சையின் பொருட்டுயாழ்தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது விடயம், பொலிஸாரின் கவனத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ-12)

## 50 வருடங்களின் பின் திருத்தப்படும் வீதி

(ஈச்சமோட்டை)

மிகவும் சேதமடைந்த நிலையில் குன்றும் குழியுமாக இருந்த யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை வீதியின் திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏறத்தாழ ஐம்பது வருடங்களுக்கு முன் இடப்பட்ட இவ் வீதி, மக்கள் போக்குவரத்துக்கு உதவாத வகையில் அண்மைக்காலத்தில் பெரும் சிரமங்களை ஏற்படுத்தி வந்தமை தெரிந்ததே.

பாஷையூர் அத்தோனியார் கோவில், சூசையப்பர் கோவில், பாஷையூர் மீன் சந்தை, மற்றும் பாடசாலைகள் போன்ற முக்கிய இடங்களுக்கு செல்லும் மக்கள் இதனூடாக பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இது குறித்து இவ் வீதியை அண்டிவாழும் பொதுமக்கள் அனைவரும் இணைந்து கையொப்பமிட்டு வீதியை உடன் திருத்தித்தருமாறு கோரி யாழ். மாநகர ஆணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-59]

## கரவெட்டிப் பகுதியில் குடிதண்ணீர் விநியோகம் இடைநிறுத்தம்

(துன்னாலை)

கரவெட்டிப் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிதண்ணீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மாதாந்தக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியதனாலேயே இக்குடிநீர் வெட்டு இடம்பெற்றிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக, பாடசாலைகளுக்கான குடிநீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதனால் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாக கூறப்படுகிறது. (உ-41)

## இல. கிரிக்கெட் அணி தலைவராக ஆனோல்ட்

(சுண்டுக்குளி)

இம் மாதம் பிற்பகுதியில் சாஜா செல்லவுள்ள இலங்கை கிரிக்கெட் அணிக்கு சனத் ஜெயசூரியா தலைமை தாங்க மாட்டார் எனவும்அவருக்குப் பதிலாக ரசல் ஆனோல்ட் அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்று செயற்படுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இங்கிலாந்து அணிக்கு எதிராக இலங்கை அணி ஆடியபோது இலங்கை அணியின் தலைவராகக் கடமையாற்றிய ஜெயசூரியா ஒழுக்கக் கேடான முறையில் நடந்துகொண்டதாலும் சிறப்பான முறையில் ஆடவில்லை என்பதாலும் தலைமைப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்எனக்கூறப்படுகிறது. (உ-110)

## நாளைதேர்

[அரியாலை]

இளவாலை அருள் மிகு ஆனை விழுந்தான் விநாயகர் மஹோற்சவத்தில் நாளை வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்குதீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (உ-106)

கால்வாய்களில்

## கழிவு நீர் தேக்கம்

[மல்லாகம்]

சுன்னாகப் பகுதி கால்வாய்களில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் அப்பகுதியில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

அத்துடன், கழிவு நீர் தேங்குவதால் துர்நாற்றம் வீசுவதால் அப்பகுதியூடாகச் செல்வோர் மூக்கைப்பொத்தியவாறு செல்கின்றனர். [உ-122]

## திருடன் பிடிபட்டான்

(மல்லாகம்)

கந்தரோடை கந்தையா வாத்தியார் வீதிப்பகுதி வீடொன்றில் பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களைத் திருடிச் சென்ற கள்வன் அவ்வூர் மக்களின் ஒத்துழைப்புடன் பிடிக்கப்பட்டு சுன்னாகப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளான். (உ-122)

## இன்று ஒரு தகவல்

# கெடுக்க நினைத்தால் கேடு

ஒரு ஊரில் ஒரு பணக்கார வியாபாரி இருந்தான். அவன் நவரத்தினங்களை வாங்கி வியாபாரம் செய்து பணம் சம்பாதித்து வந்தான். அவன் சம்பாதித்ததில் நேர்மையைக் கடைபிடித்துப் பெற்ற பணம் கொஞ்சமே. பிறரை வஞ்சித்துச் சேர்த்த பணமே பெரும் பாகம் ஆகும். அவன் இருந்த வீடு அவனது முன்னோர்கள் காலத்திலிருந்து வந்ததாகும். அது மிகவும் சிறியதாகஇருந்தது. அந்த வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு ஏழைக்குடியானவனின் இடம் இருந்தது. அதை வாங்கி விட அந்த வியாபாரி முயன்றான். ஆனால் அந்தக் குடியானவனோ, அது தன் முன்னோர்கள் விட்டுப் போனது என்று கூறி அதனை விற்கச் சம்மதிக்கவில்லை, இதனால் வியாபாரிக்கு அந்தக் குடியானவன் மீதுகோபம் ஏற்பட்டது: அவனோடு பேசுவதை நிறுத்திக் கொண்டதோடல்லாமல் அவனுக்குப் பலவிதமான தொல்லைகளைக் கொடுக்கலானான். அவனைப் பலவாறு ஏசி எப்படியாவது அவனை ஒரு வம்பில்மாட்டி விடவேண்டுமெனத்தீர்மானித்தான்.

எனவே தனக்குத் தெரிந்த மாணிக்கம் என்பவனை அந்த வியாபாரி அழைத்து 'என்வீட்டிற்குப் பக்கத்திலுள்ள குடியானவன் எனக்குப் பல வித தொல்லைகளைக் கொடுக்கிறான், அவனுக்கு நல்லபாடம் கற்பிக்க வேண்டும். அவன் என் வீட்டிலிருந்து ஒரு விலையுயர்ந்த வைரக் கல்லை திருடி விட்டதாக அரசனிடம் புகார் கொடுக்கப்போகிறேன். நீ அவன் திருடியதைப் பார்த்ததாகச் சாட்சி அளிக்க வேண்டும் இதற்கு உனக்கு நூறு வராகன்கள் கொடுக்கிறேன்' என்றான்; அவனும் அதற்குச் சம்மதித்தான். மறுநாள் அந்த வியாபாரி அரசனிடம் தன் வீட்டிற்குப் பக்கத்திலுள்ள குடியானவன் தன் வீட்டிலிருந்துஒருவைரக் கல்லைத் திருடிவிட்டதாயும், அதை மாணிக்கம் என்பவன் கண்டதாயும் கூறிப் புகார் செய்தான்; அரசனும் மாணிக்கத்தை வரவழைத்து விசாரிக்கலானான்.

மாணிக்கத்திடம் 'நீ இந்தக் குடியானவன் வைரக்கல் திருடியதைப் பார்த்தாயே? அந்த வைரம் எப்படி இருந்தது?' என அரசன் கேட்டான். மாணிக்கத்திற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவன் வைரக்கல்லையே பார்த்தது கிடையாது. சட்டென ஒரு விடயம் அவன் ஞாபகத்திற்கு வந்தது. உடனேயே அவன் தான் வைத்திருந்த மீன் பிடிக்கும் தூண்டிலைக் காட்டி 'இவ்வளவு பெரிது அந்த வைரக்கல்' என்றான். அது கேட்டு அரசன் வியாபாரியிடம் 'நீ இந்தத் தூண்டில் மாதிரி வைரம் விற்கிறாயோ' என்று கேட்க, அவன் திகைத்துப்போனான். அப்போது மாணிக்கம்' ஒரு முறை என் தூண்டிலைத் தொலைத்து விட்ட போது, என் தந்தைஎன்னைப்பார்த்து என்னடா வைரம் போல இருந்த நூண்டிலைத் தொலைத்து விட்டாயே 'என்றார். அதனால் வைரம் இது போலத்தானே இருக்கும் என்றான். அது கேட்டு அரசன் வியாபாரியின் மோச எண்ணத்தைப் புரிந்து கொண்டான். மாணிக்கத்தைப் பொய்ச்சாட்சியாக்கிய வியாபாரியைக் கடுமையாகத் தண்டித்தான்;

நன்றி
அம்புலிமாமா

# தமிழர் -சிங்களவர் என்ற பாகுபாடு இந்நாட்டில் நடைமுறையில்இல்லை

### உயர் நீதிமன்ற நீதிபதியின் கூற்றுக்கு விளக்கம்

(கொழும்பு)

அரசாங்க சேவையில் தமிழர்களுக்கு எந்தவிதத்திலும் பாரபட்சம் காட்டப்படுவதில்லை. அவ்வாறு பாகுபாடு காட்டப்படுவதாக தெரிவிக்கப்படுவது தவறானதாகுமென்று சிங்கள ஜாதிய சங்கத் தலைவர் எஸ்.எல். குணசேகர தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட விக்கினேஸ்வரன் கடந்த மாதம் 7 ஆம் திகதி ஆற்றிய சம்பிரதாய பூர்வ உரையில், அரசசேவையிலுள்ள தமிழர்களின் எண்ணிக்கை அருகி வருகின்றதென மனவேதனையுடன் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே, குணசேகர மேற்கண்டவாறு தனது கருத்தை அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரச சேவையில் ஓர் இனமென்ற வகையில் தமிழர்களுக்கு எதிரான பாகுபாடு இந்த நாட்டில் நடைமுறையில் இல்லை அவ்வாறு பாகுபாடு காட்டப்பட்டிருக்குமானால் இன்று ஏராளமான அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்று கேள்விஎழுப்பியுள்ளார்.

ஆனால் அரசசேவையில் உள்ள தமிழர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறதென்பது உண்மைதான். அவ்வாறு தமிழர்கள் அரச சேவையில் குறைவடைவதற்கு பலகாரணங்கள் உள்ளன

அச்சுறுத்தல், பழிவாங்கல்களுக்கு பயந்து தமிழ் மக்கள், புத்திஜீவிகள் வெளிநாடுகளுக்கு செல்கின்றமை அரச சேவை உத்தியோகங்களில் ஆர்வத்துடன் இணையும் தமிழ் இளைஞர், யுவதிகள் பெருமளவில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டுள்ளமை ஆகிய காரணங்களினாலேயே அரச சேவையில் உயர்பதவிகளில் தமிழர்கள் குறைவடைந்து வருகின்றனரென்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது (இ-உ)

## ஊரடங்கு தளர்த்தப்பட்டது

[ஈச்சமோட்டை]

யாழ். திருமறைக் கலாமன்றத்தினர் வழங்கும் காவியநாயகன்திருப்பாடுகளின் காட்சியை மாலை நேரம் நடத்துவதற்கு ஏதுவாக பாதுகாப்புப் பிரிவினர் 5 ஆம், 6 ஆம், 7ஆம், 8ஆம் தேதிகளில் ஊரடங்கு நேரத்தை இரவு 11 மணிவரைதளர்த்தியுள்ளதாக கலா மன்ற வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

இதனால் காவிய நாயகன் திருப்பாடுகளின் காட்சியும் மாலை 6 மணிக்குஆரம்பிக்கப் படும். இவ் ஊரடங்கு தளர்வு யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளுக்கே உரியது. என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. [உ-59]

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு கிராஞ்சியம்பதி அருள்மிகு ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரா ஆலயதில் இன்று இரதோற்சவமும் நாளை வெளளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (செ)

## சுருட்டுத் தொழிலாளர் சங்கம் அமைப்பு

(அரியாலை)

வட மாகாண சுருட்டுத் தொழிலாளர் சங்கம், ஏழாலை வடக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது

தலைவராக த. இரத்தினம், செயளாளராக து. கலியுவரதன், பொருளாளராக ச. கணேஸ், உபதலைவராக சு. தருமலிங்கம், உபசெயலாளராக க. கனகநாயகம் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். (உ-106)

## இலங்கை நிர்வாக சேவை வர்த்தமானியில் குழப்பம்

[கொழும்பு]

இலங்கைநிர்வாகசேவைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான திறந்த போட்டிப் பரீட்சை வர்த்தமானி அறிவித்தலில் பல குழப்பங்கள் உள்ளதாகவும் விண்ணப்பதாரிகள் தெரிவித்துள்ளனர்

இவ்வர்த்தமானி அறிவித்தலில கீழுழைப்பு சேவையிலுள்ள பட்டதாரிகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இதனால் இவர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியாதுஉள்ளதாக கவலைதெரிவித்துள்ளனர்.

பிரதேச செயலகங்கள் மற்றும் அரச அலுவலகங்களில் எழுதுவினைஞர் மற்றும் அதனோடு இணைந்தசேவைகளில் கீழுழைப்புச் சேவையில் பட்டதாரிகள் உள்ளனர்.

வழக்கமாக இவர்களுக்கு திறந்த போட்டிப்பரீட்சையில்வயதெல்லை கிடையாது. ஆனால் இம்முறை வர்த்தமானியில் இவர்கள தொடர்பாக எந்தவித அறிவித்தலும் வெளியிடப்படாததால், இவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (செ)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் விபரம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயப் பாடசாலைகளில் தற்பொழுது பகுதி நேர ஆசிரியர்களாகக் கடமை புரிபவர்களை எதிர்வரும் 6 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு பின்வரும் ஆவணங்களுடன் வலிகாமம் வலயக் கல்விப் பணிமனைக்கு தவறாது சமூகம் தரும் படி வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்;

தேசிய அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், க.பொ.த-(சா/த)க.பொ.த (உ/த)பெறுபேறுகள், ஆங்கில உயர் தகமைச்சான்றிதழ், பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனக்கடிதம், பகுதி நேர ஆங்கில ஆசிரியராக நியமனம் பெறுமுன் கற்பித்த இடத்திலிருந்தான அனுபவம் இருப்பின் அதுதொடர்பானசான்றிதழ்;

இது தொடர்பான தனித்தனியாக அமைப்புக்கள் நேற்றையதினம் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளது. இவ் விபரம் திரட்டுதல் தொடர்பான அறிவித்தல் ஏற்கனவே மாகாணக்கல்வி அமைச்சிற்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது; (உ-2)

## சுபத்திரன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சுகாதார ஊழியர் பிரச்சினையை அரசியலாக்கி, உள்ளூராட்சிச்சபை தொடர்ந்தும் ஜனநாயக ரீதியில் நல்ல முறையில் இயங்குவதை குழப்ப வேண்டாம்.

இவ்வாறு யாழ். மாநகர சபை உறுப்பினரும்ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினருமான சுபத்திரன் கேட்டுள்ளார்.

கடந்த திங்களன்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்; (உ- 2- 10)

## இலங். இராணுவத்திற்கு அமெரிக்கா பயிற்சி

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சிகளை வழங்குவதை அமெரிக்கா மேலும் அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் இலங்கைப் படையினருடன் இணைந்து பாரிய ஒத்திகை நடவடிக்கையை இலங்கை கடற்பரப்பில் அமெரிக்கா மேற்கொண்டது.

இதன் அடுத்தகட்ட ஒத்திகை நடவடிக்கைக்கான பேச்சுக்கள் கடந்த வெளிக்கிழமை முடிவடைந்துள்ளன. (செ)

# அமரர் நமசிவாயம் புலமைப்பரிசில் மூலதனநிதியைஅதிகரிக்கதீர்மானம்

### வறிய மாணவர் நலன் கருதி

(மந்திகை)

நமசிவாயம் புலமைப்பரிசில் நிதியத்தில் கல்வி சார்ந்த நடவடிக்கைகளுக்கான மூலதன நிதியினை அதிகரித்து பரீட்சைகளில் அதியுயர் புள்ளிகளைப் பெற்று, வறுமைக் கோட்டின் கீழ் கல்வியை தொடரும் தென்மராட்சி மாணவர்களுக்கு பணப்பரிசு வழங்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் தலைவர் தா. இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது.

வருடாந்த பொதுக் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது;

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும்5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண பரீட்சை, க. பொ.தஉயர்தரபரீட்சை ஆகியவற்றில் அதியுயர் புள்ளிகளை பெறும் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் தென்மராட்சி மாணவர்களுக்கான பரிசில் வழங்கலை விரிவுபடுத்தும் நோக்குடன் அமரர் நமசிவாயம் புலமைப்பரிசில் நிதியத்திலுள்ள மூலதனத்தை இருபதாயிரத்திலிருந்து ஐம்பதாயிரமாக அதிகரித்தல்,

சங்கத்தின் அங்கத்தவர்களின் முதல் காலாண்டுக்குரிய சந்தாத்தொகையாக இருபத்தைந்து ரூபாவும் அடுத்துவரும் மாதம் ஒவ்வொன்றுக்கும் ஐம்பது ரூபா வீதம் சந்தாவை உறுதிப் படுத்தல்.

யாழ்ப்பாணப்பத்திரிகைகளை ஊக்குவிக்கும் பொருட்டு சங்கத்தினால் வெளியிடப்படும் விளம்பர பிரசுரங்களை பத்திரிகைகளில் பிரசுரித்தல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (உ-23)

## மாணவரிடம் பணம் அறவிட முன் அனுமதி பெற வேணடும்

அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களிடம் எந்த விடயத்திற்காவது அதிபர்கள் ஆசிரியர்கள் பணம் அறவிடும்போது முன் அனுமதி பெற வேண்டும்.

தேசியப்பாடசாலைகள் மாகாணக் கல்விப்பணிப்பாளரிடமும், ஏனைய பாடசாலைகள் வலயக் கல்விப்பணிப்பாளரிடமும் முன் அனுமதி பெறவேண்டும்.

கட்டணங்கள் அறவிடுவது மட்டுமல்ல அவற்றை செலவிடுவதற்கு கல்விப் பணிமனையும் தேவையான விடயங்களில் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் முன் அனுமதி வழங்கவேண்டும எனவும் தெரிவிக்கப்பட்டுளளது. (செ)

## கரவெட்டிப் பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(துன்னாலை)

வடமராட்சி கரவெட்டிப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து அப்பகுதிப்பொதுமக்கள் மிகவும் பீதியடைந்து காணப்படுகின்றனர்.

கடந்த ஒரு மாதகாலத்திற்குள் மட்டும் பல இலட்சம் பெறுமதியான பணம், நகை வேறு சொத்துக்கள் என்பன இது வரை திருட்டுப்போயுள்ளதுடன்,

இரவு நேர வழிப்பறிகளும் அதிகரித்து வருவதாகக் கூறப் படுகிறது. (உ-41)

## தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறது.

சிவானந்தன் பாக்கியலீலா (ஆசிரியை) யா/விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் டச்சு வீதி, மீசாலை, சாவகச்சேரி, சிவசப்பு வன்னியசிங்கம் ந்திரபுரம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி, சிவசம்பு சிவகுரு சந்திரபுரம், மட்டுவில் வடக்கு சாவகச்சேரி. (உ)

BRIGHTMAN
BROWN ROAD- JAFFNA
யாழ் நகர மாணவர்களுக்காக
அளவையியல்
A/L 2002 2003
Vரகுமார்
பிரிவுகள் II ஆரம்பம்
ஏப்ரல 07 பி.ப 3.00 மணி
வாரத்தில் ஆகக்குறைந்தது நான்கு வகுப்புகள்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
(கி-1730)

### தி.மு.க. கூட்டணியின்

# தொகுதிப் பங்கீட்டுப் பட்டியல் கருணாநிதியால் வெளியிடப்பட்டது

[சென்னை]

தி மு.க கூட்டணியின் தொகுதிப் பட்டியலினை கருணாநிதி வெளியிட்டுவைத்துள்ளார்.

அவர் வெளியிட்டு வைத்த தொகுதிப் பட்டியலின் படி, திராவிடமுன்னேற்றக்கழகம்-177 இடங்களிலும் பாரதிய ஜனதாக்கட்சி-21 இடங்களிலும் புதிய தமிழகம் -10 இடங்களிலும் விடுதலைச் சிறுத்தைகள் -8 இடங்களிலும், தமிழக முஸ்லிம் ஐக்கிய ஜமாத்-3 இடங்களிலும், தி.மு.க ஆதரவு நண்பர்கள் -2 இடங்களிலும், தொண்டர்கள் காங்கிரஸ் உழவர் உழைப்பாளர் கட்சி, கொங்கு நாடு மக்கள் கட்சி, முத்தரையர் சங்கம், தமிழர் பூமி ஆகியன முறையே ஒவ்வொரு இடங்களிலும் போட்டியிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொகுதிப் பட்டியலில் எம் ஜி. ஆர் . அ.தி.மு.க புதிய நீதிக்கட்சி ஆகியவற்றிற்கு தொகுதிகள் ஒதுக்கப்படவில்லை. ம.தி.மு.க விலகியதால் எஞ்சிய தொகுதிகளில் தமக்கு பங்கு கிடைக்குமென எதிர்பார்திருந்த ஏனையகட்சிகளுக்கு தி மு க அவற்றை தனதாக்கிக் கொண்டதால் பலத்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## தேர்தல் களத்தில் நடிகைகள் குதிப்பு

(சென்னை)

தமிழக சட்டசபைத் தேர்தல் களத்தில் வழமை போன்று இம்முறையும் நடிகர் நடிகைகள் குத்திதுள்ளனர்.

எம். ஜி. ஆர் உடன்ஜோடி சேர்ந்து நடித்த லதா எம். ஜி. ஆர். அ. தி. மு. க விலும், நடிகைராதா திராவிட முன்னேற்றக் கழகத்திலும். அம்பிகா, கண்ணதாசன் விசாலி, அ. இ. அ. தி. மு. க விலும் இணைந்து போட்டியிடவுள்ளனர் .

இன்னும் இரண்டொரு தினங்களில் தேர்தலில் போட்டியிடும்வேறு நடிக நடிகைகளுடைய பெயர் விபரங்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (து)

## செய்திப்பரல்

★ அமெரிக்க முன்னாள் அதிபர் பில்கிளின்டன் ஒரு வாரப் பயணமாக இந்தியா சென்றுள்ளார்

★ ரஷ்யாவின் பொருளாதாரம் வளர்ந்து வருவதாக பிரதமர் புட்டின் தெரிவித்துள்ளார்.

★ பிலிப்பைன்ஸ் முன்னாள் அதிபர் தன்னைமீண்டும் பதவியில் அமர்த்தும்படி கேட்டுத் தொடுத்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

★ சீன அமெரிக்க விமான விபத்துக்கு புஷ் நிர்வாகம் மன்னிப்புக்கேட்டுள்ளது. (து)

## மாற்று அணி அமைக்கும் வல்லமை ம.தி.மு.க.விற்குகிடையாது

(சென்னை)

வை. கோபாலசாமியின் ம.தி மு க நிச்சயம் அ.இ.அ. தி.மு க கூட்டணியில் சேரும்.

தனித்து நின்று மாற்று அணி அமைக்கும் வலு அவர்களிடம் இல்லையென நடிகர் எம்.ஆர். ராதாரவி தெரிவித்துள்ளார்.

மேற்கு மாவட்டமான எல்லாபுரத்தில் நடைபெற்ற ஜெயலலிதாவின் 53 ஆவது பிறந்ததினவிழா மற்றும் தேர்தல் பிரச்சாரப்பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே ராதாரவி இதனைத் தெரிவித்தார்:

தி.மு.க அணியில் உள்வீட்டு அடிபிடிகள் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது.

தற்போது ம. தி. மு. க அக் கூட்டணியில் இருந்து விலகியுள்ளது. விலகிய ம.தி. மு.கவால் மாற்று அணி அமைப்பது சாத்தியமில்லை;

எனவே, அ.இ அ.தி.மு.க வில் அவர்கள் இணைவது தவிர்க்க முடியாது என நடிகர் மேலும் கூறியுள்ளார். [உ-9]

நவநாகரிகத்துக்கு ஏற்ற கண்கவர் துணிவகைகள்,
சாறிகளுக்கேற்ப பிளவுஸ் துணிவகைகள்
என்பவை புத்தாண்டை முன்னிட்டு
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
கிருஷிகா ஆடையகம்
69 , நவீனசந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.
(கி-1717)

பாராட்டி வாழ்த்துகிறோம்
திரு. நடராசா மதனராசா
(ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவர்)
அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாகப் பதவியேற்றமையினை இட்டு வாழ்த்துகிறோம்:
"பருவத்தே பயிர் செய்யும் பண்பான உன்பணி பாரினிலே தொடரட்டும் தீவகத்தில்மிளிரட்டும்'
மண்டைதீவு வாழ் மக்கள்
(2695)

## கேள்வி அறிவித்தல்

அரசாங்க அதிபர் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்.

1. யாழ்ப்பாண சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் அலுவலகக் கட்டடம் நிர்மாணித்தல் கட்டம் 111 ற்கான கேள்விகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபைத் தலைவரினால் 2001 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 25 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் அரசாங்க அதிபர் செயலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-6 அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோராவார்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்து, தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப்பெற்று, கேள்விப் பத்திரங்களை 2001 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம். | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம். |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணத்தில் சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் அலுவலகக் கட்டடம் நிர்மாணித்தல் கட்டம் 111. | ரூ 75,000/- | ரூ 1,000/- |

4. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் மேலதிக விபரங்களை கடற்கரை வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து வேலை நாட்களில் பிற்பகல் 4.45 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

க. சண்முகநாதன்.
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்,
4-4-2001.

(கி-1742)

பாத்திமாஸ் முன்றலில்
நீங்கள் இது வரை கண்டிராத
மாபெரும் அதிரடி
மலிவு விற்பனை
உங்கள் தெரிவுக்கு இன்றே முந்துங்கள்
புதிய மிலேனியத்தின் உதயம்
பாத்திமாஸ்
இல. 100, மின்சார நிலைய வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.
கி/1750

## கே.சி. சி. சி. வெற்றிக் கிண்ணம் 2001

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தினால்நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட (30) ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு யாழ். கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகிறது.

1) விண்ணப்ப முடிவு திகதி:- 10- 4- 2001
2) அணி ஒழுங்குத் தெரிவு:- 11- 4- 2001 பி. ப. 4. 00 மணி
3) விண்ணப்பக் கட்டணம்:- 300/-

குறிப்பு:- 15- 4- 2001இல் போட்டி ஆரம்பமாகும்.

செயலாளர்
சுற்றுப் போட்டிக் குழு
(2691)

நியாயத்தில் தவறாது
குடிகளைக் காக்கும்அரசன்
தெய்வம் போன்றவன்
ஆவான்
குறள்

வலம்புரி

## முகாரிகள் ஒழியட்டும்

இனப்பிரச்சினை விடயத்தில் அரசு - புலிகள் பேசுவது உறுதியாகிவிட்டது. யுத்தத்தின் விளைவு அழிவு என்பதைஇரு தரப்பாரும் உணர்ந்துள்ளனர். சமாதானப் பேச்சில் ஈடுபடுவதன் மூலமே இலங்கையின் வாழ்வு தங்கியுள்ளதென்பதை தென்னிலங்கைப் புத்திஜீவிகள் உணர்ந்துள்ளார்கள் என்பதை உணரமுடிகிறது.

கடந்த இருபது வருடங்களாக ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் நடக்கும் உள்நாட்டுப் போர் எழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்களைக் காவு கொண்டது. இத்தொகை யுத்தத்தின் நேரடியான மரணிப்பாகும். இது தவிர போரின் மறைமுகத் தாக்கத்தால் போதிய மருத்துவ வசதியின்றி போசாக்கின்றி உயிரிழந்தோர் தொகை அதனிலும் பன்மடங்காகும்.

இப்படியே யுத்தத்தின் ஆரம்பப்புள்ளியிலிருந்து கொண்டுமுற்றுப்பெறாது நீளும் யுத்தத்தின் முடிவுப் புள்ளியை நோக்கின் அழிவின் உக்கிரம் நிச்சயமாகத் தெரியவரும்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற வாசகம் நிலை பெற வேண்டுமாயின் விட்டுக் கொடுப்பனவுகளும், எல்லோரும் சம உரிமை பெற்று வாழவேண்டும் என்ற உணர்வும் மிக மிக அவசியமாகும்.

நாட்டில் அமைதி நிலவினால் மட்டுமே முகாரி இராகத்தின்மூச்சும் அடங்கும். இல்லையேல் மூலைக்கு மூலை முகாரிகள் ஒலித்துக் கொண்டேயிருக்கும் என்பதை இந் நாட்டின் ஒவ்வொரு பிரஜைகளும் உணர்ந்து கொள்வது மிக அவசியமாகும்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில்நோர்வே அரசு முனைப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கும் போது அரசு - புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான கால நேரம் நெருங்கிவரும் போது தென்னிலங்கைப் பேரினவாத அமைப்புக்களான சிஹல உறுமய, ஜே.வி.பி. போன்றன சீற்றம் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்புவதில் தீவிரமாக இறங்கியுள்ளமையும், தமிழ் மக்களின் உரிமைகளைக் கொடுப்பதை அக்கட்சிகள் ஒரு போதும் ஆமோதிக்கப் போவதில்லை.


# வவுனியா கோயிற்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில்

இவ்வாலயத்தின் இன்றைய தேர்த்திருவிழாவை யொட்டி இத் தலவரலாறு பிரசுரிக்கப்படுகிறது.

வவுனியா மத்திய பஸ் நிலையம், புகையிரத நிலையம் இரண்டு பாதை வழியும் வந்திறங்கியவர்கள் அதிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் வீதியில் முதலாம் கட்டையை அடைந்தால் (இத்தூரம் நடந்து செல்லலாம்) தென்படுவது மூன்று பாதைகள் கொண்ட முச்சந்தி. இதிலிருந்து பிரிந்து செல்வது தான் அந்தத் தவப்பேறு பெற்ற கோவில் குளக்கிராமம். இக் கிராமத்தின் முகப்பிலே தென்படுவது தான் அண்டசராசரங்களைத் தன் வயப்படுத்தும் அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில்.

ஆலயமுகப்பில் வழிப் பிள்ளையாராகக் காட்சி கொடுத்துக் கொண்டு இருப்பவர் சித்திவிநாயகர். இவ்வாலயம் தான் அங்கு வாழ்ந்த மக்களின் மனதை குடிகொண்டு இன்று வானளாவிய தூபிகளையும் மாடங்களையும் மண்டபங்களையும் கொண்டு பார்ப்போர் பரவச நிலையடையும் வண்ணம் அருள் பாலிக்கும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயிலாக விளங்குகின்றது:

முடிக்குரியவர்களால் அன்றைய கால கட்டத்தில் சைவ ஆலயத்துக்காக வழங்கப்பட்டது இக் காணி. காணியின் விஸ்தீரணம் 3 ஏக்கர் 6 பேர்ச்சசாக இருந்து. தற்போது 2 ஏக்கர் 6 பேர்ச்சசாக உள்ளது. இக் காணியில் 1956 ஆம் ஆண்டு அளவில் தற்போது வழிபட்டு வரும் விநாயகரை ஸ்தாபித்து ஆராதித்து வந்துள்ளார்கள்: இவர்களில் சின்னத்தம்பி ஐயா அவர்கள் தான் ஆலயத்தைப் பாராமரித்தும் பூசை செய்தும் வந்துள்ளார். (ஆலய குடமுழுக்கு வரை). ஆனால் இக் காணியில் சிவாலயம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்து வந்துள்ளது: அதற்கான ஏற்பாடுகள் செய்திருக்கலாம். ஆனால் அவற்றைப் பற்றிய சான்றுகள் ஒன்றும் கிடைத்திலது: அத்துடன் முயற்சி பண்ணியவர்களில் ஒருவர் தான் சின்னத்தம்பி ஐயா. மற்றவர்கள் ஆடிக்கல் நாட்டுக்கு முன்பே மறைந்து விட்டார்கள்.



சித்திவிநாயகர் பரிபாலனத்தை 1987 ஆம் ஆண்டளவில் பொறுப்பேற்ற நாங்கள் இப் பணியைப் பரிசீலனை செய்து ''சிவாலயத் திருப்பணி'' என்றபோதே பின்னடைவு எய்திய உறுப்பினர்களை விடுத்து, தனிமனித முயற்சிதான் இதற்கு வேண்டும் என்ற பேராவலுடன் அடியேனும் மறைந்த நா.இராமநாதன், இரா.சண்முகம், ஆறுமுகம் உமாதேவன் ஆகியோர் முன்னிற்க அடியார்கள் ஊக்கமும் ஒத்தாசையும் வழங்கிவர, காஞ்சிப் பெரியவரின் பூரண ஆசீர்வாதத்தின் மத்தியில் 18. 08. 1989 அதிகாலை 4.00 மணியளவில் எனது மூத்த சகோதரரும், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவரும், தீவுப் பகுதி உதவி அரசாங்க அதிபருமான ஆறுமுகம் தியாகராசா அவர்களால் சங்கு ஸ்தாபனம் செய்விக்கப்பட்டது. இப் பணி சிறப்புற நடந்துவரும் நிலையில் 1993 ஆம் ஆண்டு மார்கழி மாதம் காஞ்சிப் பெரியவரின் ஆஞ்ஞைப்படி காசியில் இலிங்கம் பெற்று வரும்போது 1994 ஆம் ஆண்டு தை மாதம் 6 ஆம் திகதி வாரணாசியில் நா.இராமநாதன் அவர்களுக்குச் சிவபதப் பேறு வாய்க்கப் பெற்றது. அதைத் தொடர்ந்து திருப்பணி சிறப்பாக நாளுக்கு நாள் புதுப்புது மெருகுடன் நடைபெற்று வந்தது இதற்கான மற்ற மூலவிக்கிரகங்களை தமிழ் நாடு ஸ்ரீரங்கம் பழனியப்பன் ஸ்தப்தியாரும், உற்சவ விக்கிரகங்களைத் தமிழ்நாடு சுவாமி மலை தேவசேனாபதி ஸ்தபதியாரும் தங்கள் கைவண்ணங்களைச் சிலைவண்ணங்களாக வார்த்துத் தந்தார்கள். அவை யாவும் மனத்தைக் கொள்ளை கொள்ளும் பொலிவு கொண்டவை இவற்றை எல்லாம் நாங்கள் எப்படிச் செய்கின்றோம் என்று கூட நாங்கள் இடைக்கிடை வியப்படைவது உண்டு. எல்லாம் அவனருள்தான் என்று சாந்தி அடைவோம். இவற்றை நானும் இக் கோயிலின் தர்மகத்தாவும் தலைவருமான இரா. சண்முகம் ஜே. பி. அவர்களுமாக இந்தியாவுக்குச் சென்று எடுத்து வந்தோம்.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட விக்கிரகங்களைப் பிரதிஷ்டைசெய்து குடமுழுக்கைச் செய்வதற்காக, கும்பாபிஷேகக் குழு ஒன்றை, சிவனடியார்களையும், திருப்பணிக்கு வாரி வழங்கிய கொடை வள்ளல்களையும், அனுபவம்மிக்கஆலய பரிபாலன சபையினரையும், தத்துவநூல்களைக் கற்றுணர்ந்த கல்விமான்களையும் ஒருங்கு கூட்டி அமைத்து, அதன்படி மகாகும்பாபிஷேக பிரதம குருவாக நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வராக் குருக்களைக் கொண்டு கடந்த 01 05 1996 இல் ஆவர்த்தனப் பிரதிஷ்டாமகா கும்பாபிஷேகத்தையும் இனிதே நடாத்தி முடித்தோம் இவையாவும் முன்னவன் முனனின்றால் முடியாதது ஒன்றுமில்லை' என்பது போல் கருணைக்கடலாம் சித்திவிநாயகர் பேரருளோடும் அம்மையப்பனின் கருணைக்கடாட்சத்தாலும் தான் இனிது நிறைவெய்தின என்பதில் எமக்கு எள்ளளவேனும் சந்தேகமில்லை.

எனக்குப் பக்கபலமாக இருந்த என் உடன் பிறவா அண்ணர் இரா, சண்முகம் ஜே.பியும் உடன்பிறப்பான ஆறுமுகம் உமாதேவனும், மறைந்தும் மறவாமல் என்னிடத்தே வந்து நினைவூட்டி வரும். நா இராமநாதனும் அவர் குடும்பத்தினரும், நிலையங்கள் எடுக்கும்போது ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து ஊக்கமளித்த சின்னத்தம்பி ஐயா. இவர்கள் துணையோடு இச் சிவன் கோவில் திருப்பணியைத் தொடர ஒரு கை கொடுப்பதை மற்றக்கைக்கு கூடத் தெரியக் கூடாது என்ற மனநிலையில் வாரி வழங்கினார்கள் புண்ணிய சீலர்கள். அந்த நிதியில் உயர்ந்தது தான் இச்சிவாலயம் இதை இங்கு வரும் அடியவர்கள் யாவரும் அறிவார்கள். அப்படி அவர்கள் வழங்கிய நிதியைக் கொண்டு ஆலயத்தை அமைத்து, தற்போது நித்திய, நைமித்தியபூசைகள் யாவும் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

**ஆ.நவரெத்தினராசா**
செயலாளர்
சித்திவிநாயகர் ஆலய சைவ மகாசபை
கோயில் குளம், வவுனியா.

## நிர்வாக, சமூக துறைகளில் கிராமியப் பெண்கள் முன்னேற்றத் திட்டம்

(கொழும்பு)

அரசியல் நிர்வாக, சமூகத் துறைகளில் கிராமியப் பெண்களை முன்னேற்றும் வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

வெல்வத்த சீனித் தொழிற்சாலை வளவில் இடம்பெற்ற மகளிர் தினக் கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்திலும் அரசசேவையிலும் பெண்கள் போதிய அளவில் பிரதி நிதித்துவப்படுத்தப்படவில்லை.

அரசியல் வாதிகளின் பிள்ளைகள் மட்டுமன்றி கிராமப் பெண்களின் பிள்ளைகளும் வெளிநாடுகளில் தொழிற் பயிற்சி பெறுவதற்கானசூழல் உருவாக்கப்படும் என்றும் மேற்கண்டவாறு கருத்துத்அவர் தெரிவித்தார். (உ-4)

## தவக்காலச் சிந்தனை -37



இயேசுவின் மீது காழ்ப்புணர்வைக் கொட்டும் விதமாக யூதர்கள் ''நீ சமாரியன், பேய் பிடித்தவன்'' என திட்டுகிறார்கள். இயேசு அவர்களுக்கு பதில் கூறுகையில் பேய் பிடித்தவன் என்பதை மட்டுமே மறுக்கிறார். பிறப்பால் அவர் சமாரியன் அல்ல. தாழ்த்தப்பட்டவர்கள், பாவிகள், புறவினத்தார் ஆகியோர் இயேசுவின்இலக்கு மக்களாக இருந்தால் தன்னை சமாரியனாக்கி கொள்கிறார். பெருமை எது என்பதற்கு யேசு விளக்கம் தருகிறார். பட்டங்கள் பெறுதல், பலராலும் முகஸ்துதி பாடப் படுதல், தன்னைச் சுற்றி நலம்விரும்பிகளை கூட்டமாக வைத்துக் கொள்ளுதல் போன்றவை இன்று பெருமையாகக் கருதப்படுகிறது. உண்மையைச் சார்ந்து வாழ்ந்து அதைப் பறைசாற்றுவதன் வழியாக விண்ணகத்தைச் சொந்தமாக்கிக் கொள்வதில்தான் உண்மையான பெருமை இருக்கிறது, ''என் வார்த்தையைக் கடைப்பிடித்தவன் சாகான்; ஆபிரகாம்பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன்'' என்றதற்கு கற்களை எடுத்தார்கள் யூதர்கள். ஆனால் இயேசுவுக்கு இவ் உண்மையால் வானம் வசப்பட்டது; அதுவே பெருமை.

காவலன்

## சாயி அருளமுதம்



பஜனைகளையும்மற்றும் பல் வேறு வணக்க முறைகளையும் பரிகசித்து அவையெல்லாம் வீண் காலவிரயம் எனக் கருதும் அறிவிலிகள் சிலர் இருக்கிறார்கள். சேற்று வயலில் நீங்கள் மூடைக் கணக்கில் நெல்லைச் சொரிகின்ற செயலைக் கூட அவர்கள் பரிகசித்து, அரிய உணவுப் பொருளை நீங்கள்வீணாக்குவதாகக் குற்றம் கூறக் கூடும். ஆனால் நீங்கள் விதைக்கும் ஒவ்வொரு மூடைநெல்லுக்கும் பிரதி பலனாகபூமித்தாய்பத்து அல்லது இருபது மடங்குகூட, அதிக தானியத்தை உங்களுக்குச் சில வாரங்களின் பின் மீளளிப்பாள் என்பது உங்களுக்குத் தெரியும். இறைவனைச் சிந்திப்பதற்கும் அல்லது செய்வீகத்தைப் போற்றுவதற்கும் செலவிடும் நேரம் உண்மையில் நன்கு செலவிடப்பட்ட நேரமாகும். ஏனெனில், அதற்குப் பிரதி பலனாக உங்களுக்கு மன நிம்மதியையும் தைரியத்தையும் பெரும் அறுவடையாக அது பரிசளிக்கும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

மங்கையர் மனம் மயங்கும்
மங்காத அசல் 22 கரட்
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
அதுதான்
**மகாநதி ஜுவல்லறி**
72A, கஸ்தூரியார் விதி
யாழ்ப்பாணம்.
(கி/1711)

# கொழும்பில் புத்தர்சிலை உடைப்பு

## வீதிகளில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்புகுஞ் சுபொறளை யில் உள்ள புத்தவிகாரை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டதெனக்கூறிநகர அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தரவின்பேரில் நேற்று அதிகாலை9மணிக்கு உடைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது,

இச்சம்பவத்தை அடுத்து இப்பகுதியில் உள்ளமக்கள் வீதியில்இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்திஉள்ளனர் இதனை அடுத்து பொரளை சந்தியில் போக்குவரத்து பலமாக பாதிக்கப்பட்டது.

சிஹலஉறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க றணவக்கே தமிழர்களின் இந்துக்கோயில்களை இப்படி இடிக்கமுடியாது தொண்டமானின் இடத்தில் போய் இந்துக்கோயிலை இடிக்கத் துணிவில்லை ஆனால்புத்த விகாரையில் கைவைத்துள்ளார்கள் (வ)

---

அரசு - - -

மேலும் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்யும் விவகாரத்தில் பிரிட்டன் எவ்வாறு பல்வேறு வகை அழுத்தங்களிற்கு இலக்காகியதோ அதேபோன்ற ஒரு நிலையிலேயே இலங்கை அரசாங்கம் தற்போது சிக்கித் தவிப்பதாகவும் ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதே வேளையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகள் அனேகமாக புத்தாண்டு தினத்தை அடுத்து ஆரம்பமாகலாம் என்றும் அவ் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-வ)

---

உள்ளத்தில் தன்னம்பிகையையும் குதூகலிப்பையும் அளிக்கக் கூடிய
கவர்ச்சிகரமான

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட மகளிர் ஆடவர்
குழந்தைகளுக்கான றெடிமேட் ஆடைகள்
புத்தாண்டை முன்னிட்டு மிகவும் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!

**சுஜானாஸ் அன் றெஸ்பொயின்ற்**

23, 24A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1713)

### விசாரணையின் பின்

உறுப்பினர்களான எஸ். தவராசா, கே. வி. கே.குகேந்திரன், சிவதாசன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின் போது ஜனாதிபதி மன்னார் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் அரசாங்கத்தின் மீது வீண் அவதூறுகள் பேசி ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் சதி செய்து வருகின்றன. இதனை முறியடிப்பதற்கு அரசு தரப்பு எம்.பிக்கள் அனைவரும் ஒன்று திரண்டு செயற்படுமாறு கேட்டுக்கொண்டார்.

இச் சந்திப்பின் போது அரசின் அமைச்சர்களோ பிரதி அமைச்சர்களோ கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ- 05)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
**நியூ ராதிகாஸ்**
**நகை மாளிகை**
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1712)

பெண்கள் - - -

பெண்பொலிசாரே இதனை மேற்கொள்ளவேண்டும் ஆனால்அண்மையில் துன்புறுத்தல்களுக்குள்ளான பெண்களின் விடையத்தில் இந்தநடைமுறை பின்பற்றப் படவில்லை.

எனவே இச்சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதி விசாரணைகளை மேற்கொள்ளவேண்டுமென்று சர்வதேசமன்னிப்புச்சபைஅரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. (வ-05)

---

3 வது - - -

யாளர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தமது உண்ணாவிரதப் போர் தொடரும் என்றும் அவர்கள்தெரிவித்தனர்

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு முன்பாக உள்ள பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உண்ணாவிரதப் போர் நடைபெற்று வருகிறது.

உண்ணாவிரதப்பேர் இன்று நாலாவது நாளாக தொடர்கிறது. (வ10-2)

---

விருது . . .

யோகேஸ்வரி பசுபதிப்பிள்ளைக்கும், வடபகுதியில் வறுமைஒழிப்பு, போசாக்கின்மை ஒழிப்பிற்காக சரோஜா சிவச்சந்திரனுக்கும் இந்தவிருதுவழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (6)

---

மனித . . .

விடயங்களும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இக்கடிதத்தில் அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ் கட்சித்தலைவர் அ. விநாயகமூர்த்திகலாநிதிஎன்.குமரகுருபரன் ரெலோமுதல்வர் என். சிறிகாந்தா, செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மனோகணேசன், அஷ்ரப் அசீஸ் ஆகியோர் உட்பட மற்றும் கட்சியின் தலைவர்களும் கையொப்பம் இட்டுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க மன்னார் சம்பவம் தொடர்பாக நியாயமான விசாரணை நடத்த அரசு தவறுமாயின் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்போவதாக ரெலோ எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். (வ)

---

பூரணமான..

சமர்ப்பிக்கவேண்டும் என்று நீதவான் கடந்த நீதிமன்ற அமர்வின் போது பொலிசாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

நீதவான் இ. த. விக்னராஜாவின் உத்தரவை அடுத்து யாழ். குற்றத்தடுப்பு பொலிசாரினால் விசாரணை முடிவடையாமையால் பூரண விபரங்கள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்க முடியவில்லையென பொலிசார் நீதிமன்றத்தில் தெரிவித்ததை அடுத்து மேற்கண்ட உத்தரவு வழங்கப்பட்டது. (வ)

---

விவகாரம் . . .

கடந்த எட்டு வருடங்களாக சேவையாற்றிய தாதிமாருக்கு இது வரையில் நியமனம் வழங்கப் படாமை, 40 குடும்ப நல சேவையாளர்கள் கடமையிருந்து இடை நிறுத்தப்பட்டமை,40 சமயா சமய ஊழியர்கள் நிறுத்தப்பட்டமை ஆகிய விடயங்கள் குறித்தும் சுட்டிக் காட்டப்பட்டது. [க-வ]

Jaffna
Technical Institute
**Jaffna-SriLanka**
Regd. NO. 15251 T.P. 3335

# தொழிற் பயிற்சிகள்

★ **Radio, T. V. and Video Deck Repairing**
சகல இன ரேடியோ, ரீ. வி, வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

★ **Motor Rewinding and Electrical Wiring**
சகல இன மோட்டார், (F) பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)

★ **Motor Cycle Mechanism**
சகல இன மோட்டார்சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும்முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 5 மாதங்கள்)

★ **Air Conditioning and Refrigeration**
சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி யளிக்கப்படும். (காலம் 6 மாதம்)

★ **City and Guilds of London Exam**
(1) Power (2) Electronics

புதிய பயிற்சிகள் ஆரம்பம்-
06 04-2001 (கிழமை நாட்களில்) 07-04-2001 (சனி, ஞாயிறு நாட்களில்)

**N. B:-**

★ பயிற்சி நெறிகள் யாவற்றுக்கும் ஒரு வருட முழுநேரச் செய்முறைப் பயிற்சி (Practical Training) அளிக்கப்படும்.
★ பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோருக்கு மாலை நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
★ தனிப்பட்ட வகுப்புக்களில் [Personal Class] கற்க விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
★ 1998 — 1999 ஆண்டில் பயிற்சி நெறிகளையும், செய்முறைப் பயிற்சிகளையும் முடித்துக் கொண்ட மாணவர்களில் இதுவரை சான்றிதழ் பெற்றுக் கொள்ளாதவர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**- DIRECTOR -**

521, Stanley Road, Jaffna.
(றெயில்வே கடவை அருகில்)

No. 7 Palaly Road, Jaffna.
கி /1744)

**Post of Clerk**
(Ad- hoc basis)
Health Service Unit

Applications are Invited to the Postof Clerk(Ad-hoc basis) for the above unit.

The Applicant Should be young energetic and able to Organize and arrange Classes inaddition to office Work. Ability to travel Outside the University. but within the town limits is essential.

Applicants Should be proficient in typying in English and ablity to Use a Computer is essential.

Applicants Should be send their APplications in their own hand writing (in English) to

The Co ordinator,
HealthServiceUnit,
Faculty of Medicine,
Jaffna.

Closing date for Applications 11. 4. 2001

Registrar.
University of Jaffna.
(ட/ 1745)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாத்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.